TAMIL NADU LEGISLATURE LIBRARY
25 மச 1978
MADRAS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1978 மார்ச் 14.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உறுக்குறியிட்ட வினாக்கள்.

வெள்ளாற்றுத் தடுப்புச் சுவர்.

*548 வினா—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம், சேத்தியாத்தோப்பு கீழ்ப்பகுதி வெள்ளாற்றின் தென் கரையான கோனூற்றங்கரை என்ற பகுதியில் உடைப்பு ஏற்படுவதைத் தடுக்க தடுப்புச் சுவர் எழுப்ப தயாரிக்கப்பட்ட மதிப்பீடு எவ்வளவு?

(ஆ) எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டது?

(இ) வேலை முழுவதும் எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) சிதம்பரம் வட்டம் சேத்தியாத்தோப்பு கீழ்ப்பகுதி ஓரத்தூர் கிராமத்தில் வெள்ளாற்றின் வலது கரையில் ஏற்படும் மண் அரிப்பைத் தடுப்பதற்காக இரண்டு வெள்ளத் தடுப்புத் தேக்கம் கட்டுவதற்காக ரூ. 3.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள பொதுப்பணித் துறையின் 24–11–77 நாளிட்ட அரசாணை எண். 1751-ல் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(ஆ) இப்பணி இன்னும் தொடங்கப்படாததால், இதுவரை செலவு ஒன்றும் ஏற்படவில்லை.

(இ) பணி தொடங்கப்பட்டு ஓராண்டில் வேலை முழுவதும் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[1978 மார்ச் 14

திரு. துரை கலியமூர்த்தி : இந்தத் தடுப்புச் சுவர் இல்லாத காரணத்தால் அங்கே நீண்ட தூரம் ஹைவேஸ் ரோடு அடித்துச் செல்லுகிற நிலையிருக்கிறது. அதோடு அங்குள்ள நிலங்களும் சேதமடைகிறது. ஆகவே, தடுப்புச் சுவர் கட்ட உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா? முன்னால் போட்ட திட்டங்கள் பாதி அளவிற்குத்தான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதன் விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1972-ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் அந்தப் பகுதி பாதிக்கப்பட்டது. அது குறித்து அப்போது ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஏழு இடங்களில் $6\frac{1}{2}$ லட்சம் ரூபாய் அளவிற்கு செலவு செய்து அந்த வெள்ளத் தடுப்புத் தேக்கம் கட்டுவதென தீர்மானிக்கப்பட்டது. ஆனால் போதிய நிதி ஒதுக்கம் அப்போது செய்யப்படவில்லை. பிறகு இந்த ஆண்டு இரண்டு இடங்களிலாவது கட்டுவது என தீர்மானித்து மூன்று இலட்சம் ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படும்.

திரு. செ. சிவசாமி : கடந்த புயல் வெள்ளம் காரணமாக மதுரையில் பல இடங்களில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. அந்தப் பகுதிகளில் சுவர் எடுக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள னவா? குறிப்பாக வைகையாற்றின் கரையோரத்தில்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : செய்யப்பட்டிருக்கு லாம். விவரம் வேண்டுமானால் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியை ஒட்டிய தாக துணைக் கேள்வி கேட்க வேண்டும்.

திரு. துரை கலியமூர்த்தி : ஆறு இலட்சம் ரூபாய் அளவிற்கு திட்டம் போட்டு மூன்று லட்சம் ரூபாய்தான் ஒதுக்கீடு செய் திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மற்ற திட்டங்கள் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஏற்கனவே சொன் னேன். ஏழு இடங்களில் அதே போல் செயய்வேண்டியுள்ளது. இரண்டு இடங்களில் செய்ய ரூபாய் மூன்று லட்சம் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் வேலை முடிந்த பிறகு அது எப்படி இயங்குகிறது என்பதைப் பார்த்து அதற்குப் பிறகு தான் மற்ற இடங்களில் அதை மேற்கொள்ளலாமா என்பது பற்றி பரிசீலனை செய்ய வேண்டும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS